BRAMPTON Flower City
brampton.ca

media release

உடனடி வெளியீட்டுக்காக

## மாநகரின் புதிய அதிகார்வபூர்வ திட்டத்திற்கான பரவசமூட்டுகின்ற வேலைத்திட்டம் மற்றும் சமுதாயத்தினர் ஈடுபாட்டுக்கான யுக்திக்கு ப்ராம்ப்ட்டன் மாநகர மன்றம் ஒப்புதல் அளிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 23, 2020) – ஜனவரி 22, 2020 தேதியன்று மாநகர மன்றத்தின் சிறப்புக் கூட்டம் ஒன்றில் வைத்து ப்ராம்ப்ட்டன் 2040 (Brampton 2040)திட்டத்தை உருவாக்குவதில் உதவுவதற்காக புதிய ஒரு வேலைத்திட்டம் – அதாவது மாநகருக்கான புதிய அதிகாரபூர்வ திட்டம் - மற்றும் சமுதாயத்தினர் அபரிமிதமான ஈடுபாடு கொள்வதற்கான யுக்தி, ஆகியவற்றுக்கு ப்ராம்ப்ட்டன் மாநகர நகர் மன்றம் ஒப்புதல் வழங்கியது.

2017 ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தின்போது பொதுமக்கள் காட்டிய அபரிமிதமான ஈடுபாட்டைத் தொடர்ந்து, ப்ராம்ப்ட்டன் 2040 தொலை நோக்குப்பார்வை (Brampton 2040 Vision) என்னும் இயக்கம் மாமன்றத்தினால் 2018 மே மாதத்தில் ஆமோதித்து கையொப்பமிடப்பட்டது. இந்த தொலைநோக்குப்பார்வையானது அதிகம் நிலைத்து நிற்கவல்ல தன்மை, மாநகரத்திற்கான நகரமயமாக்கல் மற்றும் பிரகாசமான எதிர்காலம் ஆகியவற்றை நம் கண் முன் நிறுத்துகிறது. மாமன்றத்தின் முன்னுரிமைகளுக்கான கால அவகாசம்( Term of Council Priorities) என்பது, இப்படியான எதிர்காலத்தை நோக்கி ப்ராம்ப்ட்டன் நகரத்தை கொண்டு செல்வதற்கான முக்கிய படிகள் என்னவென்று நமக்கு காட்டுகின்றது. ப்ராம்ப்ட்டன் 2040 (Brampton 2040) திட்டமானது இந்தச் செயல்முறையின் முக்கியமான அங்கமாகும் மற்றும், இந்த அதிகாரபூர்வ திட்டமானது, ப்ராம்ப்ட்டன் 2040 (Brampton 2040) தொலைநோக்குப்பார்வை தன்வசம் கொண்டிருக்கும் அபிலாஷைகளை அடைவதற்காக, மாநகரின் திட்டமிடல், திட்டப்பணிகள் மற்றும் அவற்றின் வளர்ச்சி ஆகிய அனைத்தும் சரிவர செயல்படுவதற்கான வழிகளைக் காட்டும்.

ப்ராம்ப்ட்டன் 2040 (Brampton 2040) திட்டத்தை உருவாக்குவதில் நகரின் அலுவலர்களுக்கு உதவுமுகமாக, பின் வரும் காரியங்கள் அனைத்திற்குமாக பன்முக வல்லமை என்னும் வகையில் கைகொடுக்க, நமது நகரம் WSP Canada Group Ltd என்னும் நிறுவனத்தை பணி அமர்த்திக்கொண்டிருக்கிறது: நிலத்தை உபயோகிப்பதற்கான திட்டமிடல் , கொள்கை திட்டமிடல் மற்றும் நகர்ப்புற வடிவமைப்பு ; சமுதாயம் பற்றும் பணியில் பங்கேற்போரை ஈடுபடச் செய்தல்; நிலைத்து நிற்கும் தன்மை; போக்குவரத்து செய்தல்; சுற்றுச்சூழல் திட்டமிடல்; பூங்காக்கள் மற்றும் திறந்தவெளி திட்டமிடல்; மற்றும் கலை கலாச்சாரத் திட்டமிடல் மற்றும் பாரம்பரியத்தை போற்றிக்காத்தல்.

இப்போது ஒப்புதல் கொடுக்கப்பட்ட பணித்திட்டத்தில் ஐந்து கட்டங்கள் உள்ளன, இது 2022 ஆம் ஆண்டு வரை நீடிக்கும்; இதில் எதிர்கால ப்ராம்ப்ட்டன் நகர வளர்ச்சிக்கு உருக்கொடுப்பதற்காக இந்நகரில் வசிப்பவர்களுக்கு பல்வேறு வாய்ப்புகள் உள்ளன.

<u>சமுதாயத்தினரின் ஈடுபாட்டை குறிக்கின்ற முக்கியமான மைல்கற்கள்</u>

கட்டம் 1: ***ப்ராம்ப்ட்டன் 2040 ஸ்பீக்கர் சீரீஸ் (Brampton 2040 Speaker Series )***– இது சமுதாயத்தினர் மத்தியில், மாநகரின் திட்டமிடல் பற்றிய பெருமளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான உத்தேசம் கொண்டது; இதில் மிக உயரிய மட்டத்திலான அபிலாஷைகள் கொண்ட தொலைநோக்குப்பார்வையை, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டங்களாக உருக்கொடுப்பதற்கான சிறப்புக் கவனம் கொடுக்கப்படுகிறது.

கட்டம் 2: **2040 தொலைநோக்குப்பார்வையை மற்றும் தரவுகள் முழுமையாக கிடைத்துள்ளனவா என்று சோதித்து அடையாளம் காணுதல்** – ஈடுபாட்டிற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டமானது ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப்பார்வை (Brampton 2040 Vision)யை சோதித்துப் பார்ப்பதற்கான உள்ளீடுகள் என்னவென இனம் கண்டு அதற்கான போதிய தரவுகள் கிடைப்பதில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறது.

கட்டம் 3: **சமுதாய கட்டுமான அடுக்கு உண்டாக்குவதற்கான பணிப்பயிலகங்கள்** – இந்த கட்டத்தில் ஒரு ஈடுபாடு என்பது, மாநகரம் உருவெடுக்கும்போதே, ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப்பார்வை (Brampton 2040 Vision) இல் கோடிட்டுக் காட்டியபடியான சமுதாயக் கட்டமைப்பு இருக்கிறதா என சோதித்துப் பார்த்து உறுதி செய்கிறது.

கட்டம் 4: **விவாதத்திற்கான ஆவணங்கள் மற்றும் கொள்கையின் வரைவு நிலையிலான அறிவுறுத்தல்கள்** – இந்த நிகழ்ச்சித்திட்டமானது முக்கியமான விஷயங்கள் கொண்ட பகுதியிலிருந்து (ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப்பார்வையின் ஏழு முக்கிய வாசகங்களுக்கான பகுதி) உள்ளீடுகளை எதிர்நோக்கும்; இவை, விவாதத்திற்கான ஆவணங்கள் மற்றும் கொள்கை அறிவுறுத்தல்களைக் கொண்ட அறிக்கை மூலமாக, இந்த ப்ராம்ப்ட்டன் 2040 திட்டம் நகர்ந்து செல்லும் திசையை தெரிவிக்கும்.

கட்டம் 5: **OP கொள்கைகளின் இறுதி வடிவம்** – இந்தக் கட்டத்தின்போது, ப்ராம்ப்ட்டன் 2040 திட்ட வரைவு (Draft Brampton 2040 Plan) க்குள்ளாக இருக்கும் கொள்கை வரைவுகளுக்கான உள்ளீட்டை எதிர்நோக்கும்.

யுக்தியில் குறிப்பிடப்பட்ட பணித்திட்டம் மற்றும் சமுதாயத்தினரின் ஈடுபாட்டுக்கான வாய்ப்புக்களானவை, முன்னோக்கிச் செல்லும் அதிகாரபூர்வ திட்டத்தை வழங்குவதற்கென வடிவமைக்கப்பட்டது; வெற்றிகரமான ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப்பார்வை செயல்முறை மூலமாக நிலைநாட்டப்படும் தொலை நோக்குப்பார்வையை இது பிரதிபலிக்கிறது.

ப்ராம்ப்ட்டன் 2040 திட்டத்திற்கான பணித்திட்டம் மற்றும் ஈடுபாட்டுக்கான யுக்தி பற்றி மேலும் அறிய இதற்கான அறிக்கையை( report ) பார்க்கவும் மற்றும் புதுப்பிப்புக்கள் மற்றும் அவ்வப்போது யுக்திகள் பற்றி தெரிவிக்கப்படுவதை அறிய வலைத்தளத்திற்கு( website ) வருகை தரவும்.

**பின்புலம்**

மாநகரின் தற்போதைய அதிகாரபூர்வ திட்டமானது மாநகர மன்றத்தினால் 2006 அக்டோபர் மாதம் சுவீகரித்துக்கொள்ளப்பட்டது மற்றும் ஒன்ட்டேரியோ நகராட்சி வாரியத்தினால் [Ontario Municipal Board (OMB)] அக்டோபர் 2008 இல் பகுதியளவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஒப்புதல் வழங்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரபூர்வ திட்டமும் திட்டமிடல் சட்டத்தின் பிரிவு 26(1) இன் படி திருத்தம் செய்யப்படுவதற்காக கருத்தில் கொள்ளப்படவேண்டும்; இது பிரதேச திட்டங்கள் மற்றும் கொள்கைகளுடன் ஒத்துப்போதல் மற்றும் சீராக இருத்தலை உறுத்செய்வதற்காகவே ஆகும்; புதிய ஒரு திட்டமாக அமலுக்கு வந்து 10 ஆண்டுகளுக்கு குறையாத வகையில் இந்த திருத்தம் செய்யப்பட வேண்டும்; அதன் பின்னர் இன்னொரு அதிகார பூர்வ திட்டம் கொண்டு வந்தாலே தவிர ஒவ்வொரு 5 ஆண்டுக்கு ஒருமுறையும் திருத்தம் செய்ய வேண்டும்.

**அறிஞர் மேற்கோள்கள்**

" இப்போதும் மற்றும் எதிர்காலத்திலும் மாநகரின் வளர்ச்சிக்காக ஒரு தளம் அமைப்பதில் கவனம் குவிக்கின்றபடியான அடுத்த அதிகாரபூர்வ திட்டத்தை கட்டமைப்பதற்காக, சமுதாய அளவிலான ஈடுப்பாட்டுக்கான செயல்முறையை முன்னெடுப்பதில் ப்ராம்ப்ட்டன் நகரம் பரவசமடைகிறது. பல ஆண்டுகளுக்கான எங்கள் திட்டமானது, சமுதாயத்தின் இந்த பரவசமான தொலைநோக்குப் பார்வையின்படி, அதற்கான பலன்களில் முடிவதை உறுதி செய்கிறது. இது ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் பலனளிக்கும் வகையில் இருக்கும்.."

- *மேயர் பேட்ரிக் ப்ரவுன்*

"மாநகர மன்றமாக இருந்தபடி, எங்களுடைய முன்னுரிமையானது, நன்கு நிலைத்து நிற்கவல்ல, நகர்ப்புறமயமாக்கல், மாநகரம் அமைப்பது ஆகியவற்றை நோக்கியும் செல்வதேயாகும் – இதை எங்கள் புதிய அதிகாரபூர்வ திட்டம் செய்துகாட்டும். ப்ராம்ப்ட்டன் நகரவாசிகள் அனைவரும் இந்த பல வாய்ப்புக்களில் ஏதாவது ஒன்றில் பங்கெடுத்து நமது மாநகரம் எந்த முறையில் உருவெடுத்து எதிர்காலத்திற்குள் எப்படி நுழைய வேண்டும் என்பதற்கான குரல் கொடுக்க வேண்டி நான் உற்சாகப்படுத்துகிறேன்."

- மார்ட்டின் மெடெய்ராஸ், *தலைவர், திட்டமிடல் & வளர்ச்சிக் குழு*

BRAMPTON Flower City brampton.ca

media release

“இந்த அதிகாரபூர்வ திட்டமானது, ப்ராம்ப்ட்டன் மாநகருக்கென நமது மாமன்ற உறுப்பினர்களும் குடியிருப்பு வாசிகளும் கொண்டிருக்கின்ற தொலைநோக்குப்பார்வையை நிஜமாக்குவதற்கான வாய்ப்புகளை அதிகபட்சமாக்கும் வகையில்,  நமது மாநகர அலுவலர்கள் பணியாற்றுவதற்கான அதிக விபரங்களை வழங்கும். ப்ராம்ப்ட்டன் 2040 (Brampton 2040) என்னும் இயக்கத்தை நோக்கியபடி குடியிருப்புவாசிகள் மற்றும் இதில் பங்கெடுப்போரை நகர வைப்பதற்காக இந்த மாநகரம் பணியாற்றிக்கொண்டிருக்கிறது.”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம்.  Twitter, Facebook, *மற்றும்* Instagram *ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.*  www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca